# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்**:124 **தேதி**:-26.08.2016

**PLI கமிட்டிக் கூட்டமும் இதர செய்திகளும்…**

அன்பார்ந்த தோழர்களே,

26.08.2016 அன்று PLI கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. சங்கங்களின் சார்பாக BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களும், தோழர் சந்தேஸ்வர் சிங் GS NFTE யும் கலந்துக் கொண்டனர். இவர்களுடன் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி Dy.GS BSNLEU மற்றும் தோழர் ராஜ்மௌலி Treasurer NFTE ஆகியோரும் உடன் இருந்தனர். நிர்வாகத்தின் சார்பில் திருமிகு மது அரோரா GM(Estt), திரு D.சக்கரவர்த்தி GM(Pers), திருமிகு அதி ஷரன் GM(EB) மற்றும் திரு A.M.குப்தா GM(SR) ஆகியோர் பங்கேற்றனர்.

முன்னர் நடைபெற்ற கூட்டத்தில் PLI வழங்குவதற்கான உற்பத்தி திறனை அளவீடு செய்ய வழங்கப்பட்ட மொபைல், லேண்ட் லைன் மற்றும் ப்ராட் பேண்ட் இணைப்புகள், வருவாய் உள்ளிட்ட பல விஷயங்களை முன்மொழிந்திருந்தது. ஆனால் இந்தக் கூட்டத்தில் வருவாயை மட்டுமே அளவீடாக இருக்கும் என நிர்வாகம் முன்மொழிந்தது. இதற்கு தங்களின் ஆட்சேபனையை ஊழியர் தரப்பு தெரிவித்தது. அனாலும் இதற்கான இறுதி முடிவை அடுத்த கூட்டத்தில் தெரிவிப்பதாக தெரிவித்தனர்.

இந்த ஆண்டு PLIஆக 1,100 ரூபாய் வழங்குவதாக நிர்வாக தார்ப்பில் தெரிவித்தனர். 2014-15ஆம் ஆண்டு வருவாய்; 1,100 கோடி உயர்ந்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். உயருகின்ற ஒவ்வொரு கோடி ரூபாய்களுக்கும் ஒரு ரூபாய் தருவது என அவர்கள் விரும்புகிறார்கள். இந்த முன்மொழிவை ஊழியர் தரப்பு ஏற்றுக் கொள்ளவில்லை.

கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளில் BSNLன் புத்தாக்கத்தில் மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் அதில் ஊழியர்களின் பங்கு பெரும்பான்மையானது என்றும் ஊழியர் தரப்பு தலைவர்கள் தெரிவித்தனர். இதனை கணக்கில் கொண்டு நியாயமான தொகையினை PLIஆக அறிவிக்க வேண்டும் என ஊழியர் தரப்பு ஒரே குரலில் கோரியுள்ளது. 05.09.2016 அன்று நடைபெற உள்ள அடுத்த கூட்டத்திலும் விவாதம் தொடரும்.

**JTO மற்றும் JAO தேர்வுகள் ஒத்தி வைப்பு:-** 28.08.2016 அன்று நடைபெற இருந்த 50% JTO LICE தேர்வுகளும், 10% JAO LICE தேர்வுகளும் நிர்வாக காரணங்களால் 24.09.2016 அன்று நடைபெறும் என கார்ப்பரேட் அலுவலகம் தெரிவித்துள்ளது.

**JAO தேர்வில் கூடுதல் மதிப்பெண்கள் வழங்குக**:- 17.07.2016 அன்று நடைபெற்ற 40% JAO தேர்வின் முடிவுகள் வெளியாகி உள்ளது. ஆனால் அதில் காலிப் பணியிடங்களை விட குறைவான எண்ணிக்கையிலேயே ஊழியர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். அதில் பல தோழர்கள் மிகக் குறைந்த மதிப்பெண்களில் வெற்றி வாய்ப்பை இழந்துள்ளனர். அதிலும் பல தோழர்களுக்கு குறைந்த அளவே சேவைக்காலம் உள்ளது. அடுத்த தேர்வினை எழுதும் தகுதியும் இல்லாமல் போய்விடும். எனவே அந்த தேர்விற்கு பரிவு அடிப்படையில் கூடுதல் மதிப்பெண்கள் வழங்க வேண்டும் என நமது மத்திய சங்கம் DIRECTOR(HR) அவர்களுக்கு கடிதம் கொடுத்துள்ளது.

**சுனில் மிட்டல் பாரதிக்கு 'நல்ல காலம்':-** நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்த போது ஒவ்வொரு இந்தியனுக்கும் "நல்ல காலம்'(ACHEE DIN) தருவதாக உறுதியளித்தார். இரண்டு ஆண்டு காலம் கழிந்துள்ள சூழ்நிலையில் யாருக்கு 'நல்ல காலம்' கிடைத்துள்ளது என்பதை பார்ப்போம். ஒப்பந்த தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியமாக ரூ.18,000/- வழங்க வேண்டும் என்ற கோரிக்கை மோடி அரசாங்கத்தால் மறுக்கப்பட்டு வருகிறது. அதே சமயம் இந்தியாவின் மிகப்பெரிய தொலை தொடர்பு நிறுவனமான ஏர்டெல்லின் பொதுக்குழுவில் அதன் அதிபர் சுனில் மிட்டல் பாரதியின் ஆண்டு வருமானம் 30 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு அவரது ஆண்டு வருமானம் 24.6 கோடி ரூபாயாக இருந்தது. இது போக அவரது ஊதியத்தின் பாதிக்கும் மிகாமல் அவரது இதர செலவுகள் இருக்கலாம். இது அவரது தலைவர் என்ற பதவிக்கான ஊதியம் மட்டுமே. இது போக அவரது பங்கிலிருந்து வரும் லாபம் தனி. இப்போது புரிகிறதா மோடியின் 'நல்ல காலம்' யாருக்கென்று?

**தனியார் தொலை தொடர்பு நிறுவனங்களுக்கு இடையேயான யுத்தம்:-** தனியார் தொலை தொடர்பு நிறுவனங்களின் யுத்தம் எல்லா எல்லைகளையும் கடந்துள்ளது. புதியதாக வந்துள்ள ரிலையன்ஸ் ஜியோ ஒருபுறமும், ஏர்டெல், வோடோபோன், ஐடியா உள்ளிட்ட இதர நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் COAI மறுபுறமும் இந்த யுத்தத்தில் உள்ளன. தங்களின் சந்தாதாரர்களை தக்க வைக்கவும், புதிய வாடிக்கையாளர்களை பிடிக்கவும் அவர்கள் கவர்ச்சிகரமான திட்டங்களை அறிவிக்கின்றனர். IUC கட்டணங்களை குறைப்பதன் மூலம் ரிலையன்ஸ் ஜியோவிற்கு உதவுவதாக COAI, TRAI மீது குற்றம் சாட்டுகின்றது. இணைப்புகளுக்கான போதிய புள்ளிகளை ஒதுக்குவதில்லை என ரிலையன்ஸ் ஜியோ நிறுவனம் ஏர்டெல், வோடோபோன் உள்ளிட்ட நிறுவனங்கள் மீது குற்றம் சாட்டுகின்றது. இவ்வாறாக தனியார் நிறுவனங்களுக்கிடையேயான யுத்தம் தினம் தினம் உக்கிரமாகிறது. இந்த யுத்தத்தின் அடுத்த கட்டமாக ரிலையன்ஸ் ஜியோவின் தாய் ஸ்தாபனமான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தனது 40,000 ஊழியர்களுக்கு ஏர்டெல், வோடோபோன் உள்ளிட்ட நிறுவனங்களின் சேவைகளை பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்திவிட்டு ரிலையன்ஸ் ஜியோவின் சேவைகளை பயன்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளது. இவர்களின் இந்த யுத்தம் தொடரும் வரை வாடிக்கையாளர்கள் சில சலுகைகளை பெறுவார்கள். ஆனால் இறுதியில் இந்த தனியார் தொலை தொடர்பு நிறுவனங்கள் தங்களின் சண்டையை நிறுத்திக் கொண்டு மக்களை கொள்ளயடிக்க அவர்களுக்குள் ரகசிய கூட்டணி அமைத்துக் கொள்வார்கள்.

**இந்தியாவில் தமிழகத்தில் தான் அதிக ப்ராட்பேண்ட் இண்டெர்நெட் உபயோகிப்பாளர்கள்:-** நமது நாட்டில் தமிழகத்தில் தான் அதிக எண்ணிக்கையிலான ப்ராட்பேண்ட் உபயோகிப்பாளர்கள் உள்ளனர். 31.03.2016 அன்று நாட்டில் மொத்தம் 149.75 மில்லியன் ப்ராட்பேண்ட் வாடிக்கையாளர்கள் உள்ளனர். அதில் 14.89 மில்லியன் தமிழகத்தில் உள்ளனர் என TRAIயின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அடுத்த இடங்களில் மகாராஷ்ட்ரா (13.82 மில்லியன்கள்), கர்நாடகா (12.18 மில்லியன்கள்), டெல்லி (11.98 மில்லியன்கள்) மற்றும் ஆந்திரா (11.17 மில்லியன்கள்) உள்ளன. இவர்கள் அனைவரும் 520 KBPSக்கும் அதிகமான வேகம் உள்ள இண்டெர்நெட் பயன்படுத்துகின்றனர்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

(A.**பாபு ராதாகிருஷ்ணன்**)
**மாநில செயலாளர்**